THE HINDU
Region



Rajalekshmy M.R.

# Jipmer alumna gets first rank in NEET super specialty exam

**The Hindu Bureau**
PUDUCHERRY

Jipmer has applauded its alumna Rajalekshmy M. R. for securing All India Rank 1 in the Surgical Group in NEET Super Specialty Entrance Examination 2025, held in December.

Dr. Rajalekshmy had completed her MBBS from Jipmer (batch of 2015) and subsequently pursued MS in General Surgery, (2022-2024). She further served as Senior Resident at Jipmer from September 2024 to February 2025, contributing actively to patient car, a press note said. She also bagged the gold medal for being the topper in the final Postgraduate Exam.

Dr. Rajalekshmy's alma mater, while congratulating her on the accomplishment in NEET exam, wished her all success in her future pursuits.

THE TIMES OF INDIA, CHENNAI
TUESDAY, FEBRUARY 3, 2026

# Jipmer alumna secures first rank in PG Neet

TIMES NEWS NETWORK

**Puducherry: Dr M R Rajalekshmy**, an alumna of Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (Jipmer), secured first rank in all-India level in surgical group in Neet super specialty exam, conducted in Dec 2025.



A release from the institute said Rajalekshmy completed her MBBS from Jipmer (2015 batch) and subsequently pursued MS in general surgery (2022-24). She further served as a senior resident at Jipmer from Sept 2024 to Feb 2025. She was also the topper in the final PG university exam and awarded gold medal.

Rajalekshmy now intends to pursue MCh in surgical oncology at Tata Memorial Hospital, Mumbai, one of the premier cancer care and training institutions in the country.

இந்து தமிழ் திசை

### நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி 2025 தேர்வில்

# அகில இந்திய முதல் தரவரிசையை வென்றார் ஜிப்மர் முன்னாள் மாணவி

■ புதுச்சேரி

நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி நுழைவுத் தேர்வு 2025-ல் (டிசம்பர் 2025-ல் நடைபெற்றது) அறுவை சிகிச்சை பிரிவில் அகில இந்திய தரவரிசை 1-ஐ ஜிப்மர் நிறுவனத்தின் முன்னாள் மாணவி டாக்டர் ராஜலெக்ஷ்மி வென்றுள்ளார்.



▲ டாக்டர் ராஜலெக்ஷ்மி

டாக்டர் ராஜலெக்ஷ்மி, ஜிப்மரில் எம்பிபிஎஸ் படிப்பை கடந்த 2015-ல் முடித்தார். பின்னர் பொது அறுவை சிகிச்சையில் எம்.எஸ். (2022-2024) பட்டம் பெற்றார். இதனைத் தொடர்ந்து, செப்டம்பர் 2024 முதல் பிப்ரவரி 2025 வரை ஜிப்மரில் மூத்த பயிற்சி மருத்துவராக (Senior Resident) பணியாற்றினார்.

முதுநிலை பட்டப்படிப்பு பயிற்சிக் காலத்தில் டாக்டர் ராஜலெக்ஷ்மி சிறப்பான கல்வித் திறனை வெளிப்படுத்தி, இறுதி முதுநிலை பட்டப்படிப்பு பல்கலைக்கழகத் தேர்வில் முதலிடம் பெற்று அதற்காக தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். டாக்டர் ராஜலெக்ஷ்மி தற்போது, நாட்டின் முன்னணி புற்றுநோய் சிகிச்சை மற்றும் பயிற்சி நிறுவனங்களில் ஒன்றான மும்பை டாடா மெமோரியல் மருத்துவமனையில் புற்றுநோய் அறுவைசிகிச்சை துறையில் (MCh Surgical Oncology) மேற்படிப்பைத் தொடர திட்டமிட்டுள்ளார் என்று ஜிப்மர் தெரிவித்துள்ளது.

தினமலர்

# நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி தேர்வில் ஜிப்மர் முன்னாள் மாணவி முதலிடம்

புதுச்சேரி, பிப்.3–

நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி தேர்வில் ஜிப்மர் முன்னாள் மாணவி அகில இந்திய அளவில் முதலிடம் பிடித்துள்ளார்.

நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி நுழைவுத் தேர்வு கடந்தாண்டு டிசம்பரில் நடந்தது. தர வரிசையில், அறுவை சிகிச்சை பிரிவில் அகில இந்திய அளவில் ஜிப்மர் முன்னாள் மாணவி டாக்டர் ராஜலட்சுமி முதலிடம் பிடித்துள்ளார்.

ஆந்திரவைச் சேர்ந்தவர் இவர், ஜிப்மரில் கடந்த 2015ம் ஆண்டு எம்.பி.பி.எஸ்., முடித்தார். பின்னர் பொது அறுவை சிகிச்சையில் எம்.எஸ்., பட்டம் 2022–24ல் பெற்றார். தொடர்ந்து, செப்டம்பர் 2024 முதல் பிப்ரவரி 2025 வரை ஜிப்மரில் மூத்த பயிற்சி மருத்துவராக பணியாற்றினார்.



ராஜலட்சுமி

முதுநிலை பட்டப்படிப்பு பயிற்சிக் காலத்தில், டாக்டர் ராஜலட்சுமி சிறப்பான கல்வித் திறனை வெளிப்படுத்தி, இறுதி முதுநிலை பட்டப் படிப்பு பல்கலை தேர்வில் முதலிடம் பிடித்து, தங்கப் பதக்கம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர், தற்போது, நாட்டின் முன்னணி புற்று நோய் சிகிச்சை மற்றும் பயிற்சி நிறுவனமான மும்பை டாடா மெமோரியல் மருத்துவமனையில் புற்றுநோய் அறுவை சிகிச்சை துறையில் மேற்படிப்பைத் தொடரத் திட்டமிட்டுள்ளார். இத்தகவலை ஜிப்மர் மக்கள் தொடர்பு அதிகாரி சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

தினகரன்

பிப்ரவரி 3, 2026 செவ்வாய்க்கிழமை

# நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி தேர்வில் ஜிப்மர் மாணவி முதலிடம்



புதுச்சேரி, பிப். 3: நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி 2025 தேர்வில் அகில இந்திய அளவில் ஜிப்மர் மாணவி முதலிடத்தை பிடித்துள்ளார்.

நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி நுழைவுத் தேர்வு கடந்த டிசம்பரில் நடந்தது. அறுவை சிகிச்சை பிரிவில் அகில இந்திய அளவில் முதலிடத்தை பெற்றுள்ள ஜிப்மர் மாணவி டாக்டர் ராஜலட்சுமியை ஜிப்மர் நிர்வாகம் பாராட்டியுள்ளது.

டாக்டர் ராஜலட்சுமி ஜிப்மரில் எம்பிபிஎஸ் (2015 ஆண்டு) படிப்பை முடித்ததுடன், பின்னர் பொது அறுவை சிகிச்சையில் எம்.எஸ். (2022-2024) பட்டம் பெற்றுள்ளார். இதனைத் தொடர்ந்து, செப்டம்பர் 2024 முதல் பிப்ரவரி 2025 வரை ஜிப்மரில் மூத்த பயிற்சி மருத்துவராக பணியாற்றியுள்ளார். முதுநிலை பட்டப்படிப்பு பயிற்சிக் காலத்தில், டாக்டர் ராஜலட்சுமி சிறப்பான கல்வித் திறனை வெளிப்படுத்தி, இறுதி முதுநிலை பட்டப்படிப்பு பல்கலைக்கழகத் தேர்வில் முதலிடம் பெற்று, அதற்காக தங்கப் பதக்கம் வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் அகில இந்திய அளவில் முதலிடத்தை பெற்றது குறிப்பிடத்தக்க சாதனை, ஜிப்மர் வழங்கும் உயர்தர பயிற்சியையும், அறுவை சிகிச்சைத் துறையில் அவர் காட்டிய தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது.

டாக்டர் ராஜலட்சுமி தற்போது நாட்டின் முன்னணி புற்றுநோய் சிகிச்சை மற்றும் பயிற்சி நிறுவனங்களில் ஒன்றான மும்பை டாடா மெமோரியல் மருத்துவமனையில் புற்றுநோய் அறுவைசிகிச்சை துறையில் மேற்படிப்பைத் தொடரத் திட்டமிட்டுள்ளார். டாக்டர் எம். ராஜலட்சுமிக்கு ஜிப்மர் தனது உளமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு, அவரது எதிர்கால கல்வி மற்றும் தொழில்முறை முயற்சிகளில் தொடர்ச்சியான வெற்றியை பெறவும் வாழ்த்துகளை தெரிவித்துள்ளது.

தினமணி

# நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி தேர்வு: ஜிப்மர் முன்னாள் மாணவி முதலிடம்



டாக்டர் எம். ராஜலக்ஷ்மி

**புதுச்சேரி, பிப். 2:** நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி அறுவை சிகிச்சை மருத்துவ படிப்புக்கான தேர்வில் அகில இந்திய தர வரிசையில் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக்கல்லூரி முன்னாள் மாணவி முதலிடம் பிடித்துள்ளார்.

இதுகுறித்து ஜிப்மர் நிர்வாகம் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி அறுவை சிகிச்சை பிரிவில் அகில இந்திய தர வரிசையில் ஜிப்மர் நிறுவனத்தின் முன்னாள் மாணவி டாக்டர் எம்.ராஜலக்ஷ்மி முதலிடம் பிடித்துள்ளார். அவரை ஜிப்மர் பெருமையுடன் பாராட்டுகிறது.

டாக்டர் ராஜலக்ஷ்மி, ஜிப்மரில் எம்பிபிஎஸ் (2015) படிப்பை முடித்தார். பின்னர் பொது அறுவை சிகிச்சையில் எம்.எஸ். (2022-2024) பட்டம் பெற்றுள்ளார். இதைத் தொடர்ந்து, செப்டம்பர் 2024 முதல் பிப்ரவரி 2025 வரை ஜிப்மரில் மூத்த பயிற்சி மருத்துவராகப் பணியாற்றினார்.

முதுநிலை பட்டப்படிப்பு பயிற்சிக் காலத்தில், டாக்டர் ராஜலக்ஷ்மி சிறப்பான கல்வித் திறனை வெளிப்படுத்தி, இறுதி முதுநிலை பட்டப்படிப்பு பல்கலைக்கழகத் தேர்வில் முதலிடம் பெற்றார். அதற்காகத் தங்கப் பதக்கம் பெற்றார்.

இப்போது தேசிய அளவில் நீர் தேர்வு தரவரிசையில் முதலிடம் பெற்றுள்ளார். அவரது இந்த சாதனை, ஜிப்மர் வழங்கும் உயர்தர பயிற்சியையும், அறுவை சிகிச்சைத் துறையில் அவர் காட்டிய தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது.

மருத்துவர் ராஜலக்ஷ்மி தற்போது, நாட்டின் முன்னணி புற்றுநோய் சிகிச்சை மற்றும் பயிற்சி நிறுவனங்களில் ஒன்றான மும்பை டாடா மெமோரியல் மருத்துவமனையில் புற்றுநோய் அறுவை சிகிச்சை துறையில் மேற்படிப்பைத் தொடரத் திட்டமிட்டுள்ளார். அவருக்கு ஜிப்மர் தனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, அவரது எதிர்கால கல்வி மற்றும் தொழில்முறை முயற்சிகளில் தொடர்ந்து வெற்றி பெற வாழ்த்துகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்

# நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி தேர்வில் ஜிப்மர் முன்னாள் மாணவி முதலிடம்

ADDED : பிப் 03, 2026 04:49 AM



புதுச்சேரி: நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி தேர்வில் ஜிப்மர் முன்னாள் மாணவி அகில இந்திய அளவில் முதலிடம் பிடித்துள்ளார்.

நீட் சூப்பர் ஸ்பெஷாலிட்டி நுழைவுத் தேர்வு கடந்தாண்டு டிசம்பரில் நடந்தது. தர வரிசையில், அறுவை சிகிச்சை பிரிவில் அகில இந்திய அளவில் ஜிப்மர் முன்னாள் மாணவி டாக்டர் ராஜலட்சுமி முதலிடம் பிடித்துள்ளார்.

ஆந்திரவைச் சேர்ந்தவர் இவர், ஜிப்மரில் கடந்த 2015ம் ஆண்டு எம்.பி.பி.எஸ்., முடித்தார். பின்னர் பொது அறுவை சிகிச்சையில் எம்.எஸ்., பட்டம் 2022-24ல் பெற்றார். தொடர்ந்து, செப்டம்பர் 2024 முதல் பிப்ரவரி 2025 வரை ஜிப்மரில் மூத்த பயிற்சி மருத்துவராக பணியாற்றினார்.

முதுநிலை பட்டப்படிப்பு பயிற்சிக் காலத்தில், டாக்டர் ராஜலட்சுமி சிறப்பான கல்வித் திறனை வெளிப்படுத்தி, இறுதி முதுநிலை பட்டப்படிப்பு பல்கலை தேர்வில் முதலிடம் பிடித்து, தங்கப் பதக்கம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர், தற்போது, நாட்டின் முன்னணி புற்றுநோய் சிகிச்சை மற்றும் பயிற்சி நிறுவனமான மும்பை டாடா மெமோரியல் மருத்துவமனையில் புற்றுநோய் அறுவை சிகிச்சை துறையில் மேற்படிப்பைத் தொடரத் திட்டமிட்டுள்ளார். இத்தகவலை ஜிப்மர் மக்கள் தொடர்பு அதிகாரி சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

Link: https://www.dinamalar.com/news/puducherry/jipmer-alumna-tops-neet-super-specialty-exam/4141243